## ரபேவ பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 10 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரம்பேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 41,654,000 தொகையான வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 167,125 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 417,806 பெறுமதியான உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 8,200,000 கூட்டுத்தொகையான புதிய அலுவலக கட்டிடங்கள், சிற்றுண்டிச்சாலை கட்டிடங்கள் மற்றும் பிஹிம்பியாகொல்ல வாரச்சந்தை கட்டிடம் என்பன நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 543,300 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் 2015 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,136,416 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 736,552 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீத வரி

சபை வீதவரி பதிவேட்டின் பிரகாரம் வீத வரி அறவிடப்படுகின்ற 319 அலகுகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 206,502 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 வாடகை

சபைக்குச் சொந்தமான 04 வியாபார நிலையங்களிலிருந்து மீளாய்வாண்டில் வாடகை செலுத்தப்பட்டிருந்த 04 குத்தகையாளர்களால் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,294,033 தொகையை சபையால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 முத்திரைக் கட்டணம்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக இனங்காணப்பட்ட ரூபா 543,300 ஆன நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

03. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 25,500,790 தொகையான 17 கணக்கு மீதிகள் குறிப்பாக இனங்காணப்படாமல் 2013 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னிருந்து தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 100 துலான, ரம்பேவ பொது மயான த்தின் உரித்தைக் கையேற்பதற்கு முன்னர் வேலி நிர்மாணிக்க பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 249,685 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், பெற்றுக்கொண்ட பொருட்கள் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ரம்பேவ வாரச் சந்தைக் காணி, மஹமல்கொல்லேவ வாரச்சந்தை கட்டிடம், ரம்பேவ நகரின் பொது மலசலகூடம் மற்றும் கட்டிடங்கள் ஆகிய சொத்துக்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 59 ஆம் விதியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தின் போதும் சபை அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடொன்று நடாத்தப்பட்டு கைத்தொழில் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணணி, உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக வியாபார நிலையங்களிலிருந்தும் வீடுகளலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களை முறையாக சேகரித்து திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று சபையால் செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 நவம்பர் 14 ஆந் திகதிய 2014/25 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் 14 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தன. அரச சேவைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் பிரகாரம் 2015 நவம்பர் 30 ஆந் திகதிய வடமத்திய மாகாண ஆளுனர் செயலாளரின் 3/1/(1)-5 இணை கடிதத்தின் பிரகாரம் அந்த நிரந்தர நியமனங்களை உடனுக்கு அமுலாகும் வரையில் இரத்துச் செய்யுமாறு அறிவித்து 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அந்நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட திகதி முதல் இரத்துச் செய்யப்படும் வரை ரூபா 7,153,228 தொகை சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 856,800 பெறுமதியான 03 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த காரணத்தினால் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்